முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.

அமர்வு வழக்கு எண் : 256/2019

அரசுதரப்பு 5 -வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வேலு | வயது | : | 40 |
| தந்தை/கணவர் பெயர் | : | ஜெயராமன் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)-ன் விதிமுறைகளின்படி 15.11.2022 ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

முதல் விசாரணை - நான் தற்போது வடகுத்து கிராமத்தில் வசிக்கிறேன். ஹாலோபிளாக் பிரிக்ஸ் கடை வைத்துள்ளேன். 10.11.2018 அன்று எங்கள் கம்பெனியில் வேலை செய்து கொண்டிருக்கும்போது தெற்கிலிருந்து வடக்கு நோக்கி அரசு பேருந்து வந்தது. 3 பேர் அந்த பேருந்தை கல்லால் அடித்தார்கள். யார் கல்லால் அடித்தார்கள் என்று தெரியாது. கல்லால் அடித்ததால் பஸ் கண்ணாடி உடைந்து கிடந்தது. கல், கோலிகுண்டு கீழே கிடந்தது. பார்த்து விட்டு வந்து விட்டேன். மறுநாள் போலிசார் வந்து விசாரித்தார்கள். நடந்தவற்றை சொன்னேன்.

சாட்சி பிறழ்சாட்சியாக கருத அரசுதரப்பில் அனுமதி கேட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை - போலிசார் விசாரணையில் கடந்த 11.12.2018 ஆம் தேதி நானும், ராஜதுரை என்பவரும் எங்கள் கம்பெனியில் பேசி கொண்டிருந்தபோது TN 32 N 3393 என்ற பேருந்தை அணைக்கரையிலிருந்து பண்ருட்டி வந்து கொண்டிருந்ததாகவும், அதே ரோட்டில் பேருந்துக்கு எதிரே வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்த இருசக்கரவாகனம் TN 45 AH 9217 கருப்பு கலர் பல்சர் வண்டி பெயர் விலாசம் தெரியாத 3 நபர்கள் கைகளில் கருங்கல்லும், கோலிகுண்டுகளாலும் பேருந்தின் முன்பக்க கண்ணாடியை உடைத்து சேதப்படுத்தி தெற்கு பக்கம் நெய்வேலி மார்க்கமாக தப்பி சென்று விட்டார்கள் என்றும் போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள்தரப்பில் குறுக்கு விசாரணை - அரைமணிநேரம் பஸ் அங்கே நின்று கொண்டிருந்தது. அப்போது போலிசார் அங்கு வந்து விட்டார்கள். என்ன நடந்தது என்று போலிசார் விசாரித்தார்கள். போலிசாருக்கு அனுசரணையாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.</u>

அமர்வு வழக்கு எண் : 256/2019

அரசுதரப்பு 6 -வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஹரி | வயது | : | 33 |
| தந்தை/கணவர் பெயர் | : | வெங்கடேசன் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)-ன் விதிமுறைகளின்படி 15.11.2022 ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

முதல் விசாரணை - நான் தற்போது மருங்கூர் கிராமத்தில் வசிக்கிறேன். ஹாலோபிளாக் கல் அறுக்கும் கம்பெனியில் வேலை செய்கிறேன். 12.11.2018 அன்று காலை 6, 7 மணிக்கு வேலைக்கு நானும், செஞ்சிவேலும் வேலைக்கு சென்றோம். அப்போது முத்தாண்டிக்குப்பம் போலிசார் அங்கு இருந்தார்கள். வரைபடம் வரைந்தார்கள். அங்கு வந்து பார்த்தற்காக சாட்சியாக கையெழுத்து போட்டேன். அங்கு கிடந்த கல், கோலிகுண்டு ஆகியவற்றை கைப்பற்றினார்கள். பார்வை மகசர் அசாஆ.2 ஆகும். கைப்பற்றுதல் மகசரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அது மதசாஆ.3 ஆகும். அன்றைக்கு போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

எதிரிகள்தரப்பில் குறுக்கு விசாரணை - நான் கையெழுத்து போட்ட ஆவணங்களில் என்னஎழுதியிருக்கிறது என்று தெரியாது. போலிசார் சொல்லிக்கொடுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.</u>

அமர்வு வழக்கு எண் : 256 /2019

அரசுதரப்பு 7-வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செஞ்சிவேல் | வயது | : | 55 |
| தந்தை/கணவர் பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)-ன் விதிமுறைகளின்படி 15.11.2022 ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

முதல் விசாரணை - நான் தற்போது மருங்கூரில் குடியிருக்கிறேன். ஹாலோபிளாக் தொழிற்சாலையில் வேலை செய்கிறேன். 2018 ஆம் ஆண்டு நான் வேலைக்கு வரும்போது சம்பவ இடத்தில் முத்தாண்டிக்குப்பம் போலிசார் கும்பலாக இருந்தார்கள். நாங்கள் என்ன என்று பார்க்க சம்பவ இடம் சென்றோம். போலிசார் வந்து பார்த்ததற்காக சாட்சி கையெழுத்து போட்டார்கள். அங்கு உடைந்த கண்ணாடி, குண்டு, கல் ஆகியவற்றை கைப்பற்றி கவரில் போட்டார்கள். அதற்காக கையெழுத்து போட சொன்னார்கள். பார்வை மகசரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையதுதான். கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையதுதான். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

எதிரிகள்தரப்பில் குறுக்கு விசாரணை - அந்த ஆவணங்களில் என்ன எழுதியிருக்கிறது என்று எனக்கு தெரியாது. போலிசார் சொல்லிக்கொடுத்து பொய்யாக சாட்சியம் கூறுகிறேன் என்றால் சரியல்ல.